பாடம் 1

# பவுல்: புறஜாதிகளுக்கான அப்போஸ்தலன்

**மனன வசனம்**

**இவைகளை அவர்கள் கேட்டபொழுது அமர்ந்திருந்து, “அப்படியானால் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச்செய்தார்” என்று சொல்லி, தேவனை மகிமைப் படுத்தினார்கள். அப்போஸ்தலர் 11:18.**

**ஆராய்ச்சிக்கு**

**அப் 6:9-15; அப் 9:1-9; 1சாமுவேல் 16:7; மத்தேயு 7:1 அப் 11:19-21; அப் 15:1-5.**

ஜூன் 24 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.



தர்சுவின் சவுல் (மனமாற்றத்திற்கு பிறகு பவுல் அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டவர்) முதலில் மோசமாக நடந்துகொண்டதற்கு காரணமிருக்கிறது. அவர் அர்ப்பணிப்புமிக்க ஒரு யூதர்; பிரமாணத்தின் முக்கியத்துவம் பற்றியும், மேசியாவால் அரசியல் ரீதியாக இஸ்ரவேலுக்குக் விடுதலை கிடைக்கப்போகிறது என்றும் சிறுவயதுமுதலே அவருக்குக் கற்பித்திருந்தார்கள். மேலும், வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த மேசியா வந்துவிட்டதாக கிறிஸ்தவர்கள் போதித்தார்கள். ஆனால், மிகக் கொடுமையான குற்றவாளிபோல் அவர் கொல்லப்பட்டார் என்றார்கள். இதை பவுலால் சகிக்கவேமுடியவில்லை.

அதனால்தான் இயேசுவைப் பின்பற்றினவர்கள் டோராவுக்கு உண்மையாக இல்லாததாகவும், இஸ்ரவேல் குறித்த தேவ திட்டத்திற்கு குறுக்கே நிற்பதாகவும் கருதினார். சிலுவையில் அறையப்பட்ட இயேசுதாம் மேசியா என்றும், மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுந்தார் என்றும் அவர்கள் செய்த உபதேசத்தை விசுவாசத் துரோகமாகக் கருதினார். அப்படிப்பட்ட முட்டாள்தனமான நம்பிக்கைகளிலிருந்து விலகாத எவரையும் விட்டுவைப்பதில்லையெனத் தீர்மானித்தார். அத்தகைய நம்பிக்கைகளை இஸ்ரவேலிலிருந்து அகற்றப்போகிற தேவனுடைய பிரதிநிதியாகச் செயல்பட முனைந்தார். அதனால்தான், இயேசுவை மேசியாவென நம்பின தன் சக யூதர்களை வன்மையாக உபத்திரவப்படுத்தினவராக முதலில் வேதாகமம் அவரை அறிமுகப்படுத்துகிறது

ஆனால், பவுலைக் குறித்த தேவதிட்டம் வேறு; அவரும்கூட எதிர்பார்த்திராத ஒரு திட்டம் அது. அதாவது, இயேசுவே மேசியா என்று அவர் பிரசங்கிக்க வேண்டியிருந்தது; அதுவும், புறஜாதியாருக்கு அவர் ஊழியம்செய்ய வேண்டியிருந்தது.

2017, ஜூலை 1 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தினவன்

ஸ்தேவான் கல்லெறியப்பட்ட சம்பவத்தில்தான் தர்சுவின் சவுலை அப்போஸ்தலர் புத்தகம் முதலில் அறிமுகப்படுத்துகிறது. அப் 7:58. பிறகு, எருசலேமில் பெரிதளவில் உண்டாகியிருந்த உபத்திரவத்திற்கு காரணமானவராகக் காட்டப்படுகிறார். அப் 8:1-5. பேதுரு, ஸ்தேவான், பிலிப்பு, பவுல் ஆகியோர் அப்போஸ்தலர் புத்தகத்தின் முக்கிய நபர்கள்; ஏனெனில், யூத உலகத்தையும் தாண்டி கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரவச்செய்த நிகழ்ச்சிகளில் அவர்களுக்குப் பங்கிருந்தது. இவர்களில் ஸ்தேவான் அதிகம் குறிப்பிடத்தக்கவர்; ஏனென்றால், அவருடைய பிரசங்கமும் இரத்தசாட்சி மரணமும்தான் தர்சுவின் சவுலில் ஓர் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

ஸ்தேவான், கிரேக்க மொழி பேசின ஒரு யூதர்; ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட ஏழு சபை உதவியாளர்களில் ஒருவர். அப் 6:3-6. பிறதேசங்களிலிருந்து வந்து, எருசலேமில் குடியிருந்த யூதர் கூட்டத்தார் சிலர், இயேசுவைப்பற்றி ஸ்தேவான் பிரசங்கித்தது குறித்து, அவரோடு வாக்குவாதம் செய்தார்கள். தர்சுவின் சவுலும் கூட அந்த வாக்குவாதத்தில் கலந்துகொண்டிருந்திருக்க வாய்ப்பு உள்ளது.

***ஸ்தேவானுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவை? அப்போஸ்தலர் 6:9-15. வேறெந்தக் குற்றச்சாட்டுகளை இவை நினைவுபடுத்துகின்றன? மத்தேயு 26:59-61.***

---

ஸ்தேவானின் பிரசங்கத்தால் அவர்களுக்கு கடுங்கோபம் மூண்டதற்கு இரண்டு விஷயங்கள் காரணமாக இருந்திருக்கவேண்டும். முதலாவது, யூதப்பிரமாணத்தையும் தேவாலயத்தையும்தான் தங்கள் மார்க்கத்திற்கும் தேசத்திற்கும் பெரும் அடையாளச் சின்னங்களாக யூதர்கள் கருதினார்கள்; ஸ்தேவான் அவற்றிற்கு முக்கியத்துவமளித்துப் பேசவில்லை. இரண்டாவது, முக்கியமான இந்த அடையாளங்களைக் கண்டுகொள்ளாததோடு, சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்த மேசியாதான், யூத விசுவாசத்தின் உயிர்மூச்சு என்றும் மிகத் தீவிரமாக ஸ்தேவான் பிரசங்கித்தார்.

பரிசேயனாகிய பவுலுக்குக் கோபம் வந்திருக்கும். பிலிப்பியர் 3:3-6. பரிசேயர்களில் தீவிரவாத, மதவெறிமிக்க கூட்டத்தில் பவுலும் ஒருவராக இருந்திருக்கவேண்டும்; அப்படிப்பட்ட வைராக்கியத்தோடுதான் ஆதிகால கிறிஸ்தவர்களுக்கு எதிராக அவர் செயல்பட்டார். தேவனுடைய இராஜ்யத்தைப்பற்றிய பின்வரும் வேதப்பகுதிகள் நிறைவேறுமென்று காத்திருந்திருப்பார். தானியேல் 2; சகரியா 8:23; ஏசாயா 40-55. அந்த நாள் வருவதற்காக தேவனுக்கு உதவிசெய்யவும் அவர் நினைத்திருந்திருக்கலாம். இந்த இயேசுதாம் மேசியா என்பது உட்பட, இஸ்ரவேலிலிருந்து அனைத்து விசுவாசச் சீர்கேட்டையும் ஒழிப்பதுதான் அதற்கு ஒரே வழியென அவர் நினைத்திருக்கலாம்.

---

தான் நம்புவதுபோல நம்பாதவர்களைக் கொல்லுவதற்கு பவுல் ஆயத்தமாக இருந்தார். வைராக்கியம் தேவைதான்; ஆனால், இவ்வாறு நாம் செயல்படும்போது, நாம் பிறரைத் தவறாகக் கணித்துவிட்டால், என்ன செய்வது?

*அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்: நீ துன்பப் படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அப்போஸ்தலர் 9:5.*

ஆதிகால சபையை உபத்திரவப்படுத்தின சவுல் முதலில் பகிரங்கமாகச் செயல் படவில்லை. (ஸ்தேவான் கல்லெறியப்பட்டபோது அவருடைய மேலங்கியை வைத்திருந்தார் அவ்வளவுதான்); ஆனால் பின்னர் மிகத்தீவிரமாகச் செயல்பட்டார். அப் 8:1-3; 9:1,2,13,14,21; 22:3-5. தன் எதிரியைச் சின்னாபின்னாமாக்கும் ஒரு காட்டு மிருகம்போன்று, தன் எதிரியைச் சூறையாடும் ஒரு போர்வீரனைப் போன்று, சவுலின் செயலும் இருந்ததாகச் சுட்டிக்காட்டுகிறார் லூக்கா. உதாரணமாக, அப் 8:3இல் சொல்லப்படும் 'பாழாக்குதல்' எனும் வார்த்தைக்கான கிரேக்க வார்த்தைதான், பழைய ஏற்பாட்டில் சங் 80:13இல் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஒரு காட்டுப்பன்றியானது கட்டுக்கடங்காமல் அழிவை உண்டாக்குவதை அது சுட்டிக் காட்டுகிறது. கிறிஸ்தவர்களுக்கு எதிராக சவுல் தொடுத்திருந்த யுத்தமானது தன் வசதிக்காக அரைகுறை மனதோடு அவர் செய்தது அல்ல; கிறிஸ்தவ விசுவாசத்தை முற்றிலும் அழிப்பதற்கு துணிகரமாகத் திட்டமிட்டுச் செயல்பட்டார்.

***சவுலின் மனமாற்றம்பற்றி மூன்று இடங்களில் சொல்லப்படுவதையும் வாசியுங்கள். அப் 9:1-18; 22:6-21; 26:12-19. பவுலுடைய மனமாற்றத்தில் தேவகிருபையின் பங்கு என்ன? அதாவது, தேவன் காட்டிய கிருபைக்கு பவுல் எவ்வளவு தூரம் தகுதியுடையவராக இருந்தார்?***

சவுலின் மனமாற்றம் மனிதரைப் பொறுத்தவரை நம்பமுடியாத ஒன்றுதான். அதனால்தான் முதலில் அதுபற்றிக் கேள்விப்பட்ட போது, அநேகர் நம்பவில்லை.

சவுல் தண்டனைக்குரியவர்; ஆனால் வைராக்கியமிக்க அந்த யூதனுக்கு தேவன் கிருபைகாட்டினார். சவுல் தானாகவே மனமாறிவிடவில்லை; அதேசமயம், மனமாறும்படி அவர் கட்டாயப்படுத்தப்படவும் இல்லை.

சவுல் நாத்திகர் கிடையாது. அவர் பக்திமிக்கவர்; ஆனால், தேவனைப்பற்றி மிகவும் தவறாகப் புரிந்துவைத்திருந்தார். 'முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்'' என்று பவுலிடம் இயேசு சொன்னதால், பரிசுத்த ஆவியானவர் அவரை உணர்த்திவந்தது தெரிகிறது. அப் 26:14. 'முள்' என்பது, தார்க்கோலில் உள்ள கூரான ஆணியைக் குறிக்கிறது; உழுவதற்கு மறுக்கும் மாடுகளை அதால் குத்தி, முடுக்குவார்கள். தேவன் அவ்வாறு உணர்த்திவந்த போதிலும் சவுல் தொடர்ந்து அடம்பிடித்து வந்தார்; ஆனால் இறுதியாக, தமஸ்குவுக்குச் செல்லும் வழியில், உயிர்த்தெழுந்த இயேசுவோடு உண்டான ஓர் அற்புதமான சந்திப்பில், தன் கலகக் குணத்தை விட்டுவிடுவதற்கு சவுல் தீர்மானித்தார்.

உங்கள் மனமாற்றத்தைப்பற்றி யோசித்துப்பாருங்கள். பவுலுடையதைப்போல திடீர்த் திருப்பங்கள் இல்லாதிருக்கலாம். ஆனால், தேவகிருபையை ருசித்திருப்பீர்கள். எவ்வாறு? கிறிஸ்துவில் நமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் மறக்காமல் இருப்பது ஏன் முக்கிய மானது?

## தமஸ்குவில் சவுல்

சவுலை இயேசு சந்தித்த அந்தச் சம்பவத்தில், சவுல் குருடாகிறார்; யூதா என்பவருடைய வீட்டிற்குச் சென்று, அனனியா என்பவர் வரும்வரை அங்குக் காத்திருக்குமாறு சொல்லப்படுகிறது. இயேசுவின் அடியார்களை உபத்திரவப்படுத்த தன்னைத் தூண்டின ஆவிக்குரிய குருடு எவ்வளவு மோசமானது என்பதை சரீரப்பிரகாரமான குருடானது பவுலுக்கு வல்லமையாக உணர்த்தியிருக்கும்.

தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் சவுலுக்கு இயேசு தரிசனமானதும் எல்லாமே மாறிப்போனது. தான் சரியென நினைத்திருந்த விஷயத்தில் சவுல் முற்றிலும் தவறுசெய்திருந்தார். தேவனுக்காக வேலைசெய்வதற்குப் பதிலாக, அவருக்கு எதிராக வேலை செய்திருந்தார். பெருமைமிக்க, வைராக்கியமான ஒரு பரிசேயனாக எருசலேமிலிருந்து கிளம்பினவர், இப்போது வித்தியாசமான ஒரு மனிதனாக தமஸ்குவிற்குள் நுழைந்தார். சவுல் அங்கு புசிக்கவோ குடிக்கவோ இல்லை; தனக்கு நிகழ்ந்த அனைத்தையும் தியானித்தவராக, முதல் மூன்று நாட்களை ஜெபத்திலும் உபவாசத்திலும் கழிக்கிறார்.

**அப் 9:10-14 இல், அனனியாவின் மனதில் என்னென்ன சிந்தனைகள் ஓடியிருக்கும்?**

உபத்திரவப்படுத்திவந்த சவுல், இப்போது இயேசுவில் விசுவாசம் வைத்தவராக பவுல் என்று பெயர்பெற்றார்; புறஜாதியாருக்கு சுவிசேஷம்கொண்டு செல்ல தேவன் தெரிந்துகொண்ட பாத்திரமாக விளங்கினார். அப் 26:16-18. அனனியா சற்று குழம்பித்தான் போனார். சவுல் மனம்மாறி 3 வருடங்கள் கழித்தும் எருசலேமின் சபை அவரை ஏற்றுக்கொள்ள தயங்கியிருந்தால் (அப் 9:29-30), அவர் மனம்மாறி ஒரு சில நாட்களே ஆனநிலையில், தமஸ்குவிலிருந்த விசுவாசிகள் எவ்வளவுக்குத் தயங்கியிருப்பார்கள்!

தர்சுவின் சவுலுடைய ஆச்சரியமான அனுபவத்தை ஒரு தரிசனத்தின்மூலம் அனனியாவுக்கும் ஆண்டவர் கூறினார். யூத விசுவாசிகளின் எதிரி ஒருவன் தங்களில் ஒருவனாக மாறினான் என்பதை ஒரு தரிசனத்தினாலேயன்றி, வேறு எவ்விதத்தில் சொல்லியிருந்தாலும் அவர் நம்பியிருப்பது கடினம்.

கிறிஸ்தவ விசுவாசத்தை வேரோடு அழிக்கும்படி பிரதான ஆசாரியர்களின் கட்டளையையும் அதிகாரத்தையும் பெற்று எருசலேமிலிருந்து கிளம்பினார் சவுல் (அப் 26:12); ஆனால் உன்னத அதிகாரம்படைத்த தேவன், முற்றிலும் வித்தியாசமான ஓர் ஊழியப்பணியை சவுலுக்கு வைத்திருந்தார். புறஜாதியாருக்கு அவர் சுவிசேஷம் அறிவிக்கவேண்டும். பவுல் மனம் மாறின விஷயத்தைவிட இதுதான் அனனியாவுக்கும் மற்ற யூத விசுவாசிகளுக்கும் அதிக அதிர்ச்சியாக இருந்திருக்கும்.

கிறிஸ்தவ விசுவாசம் எங்குப் பரவக்கூடாதென்று பவுல் நினைத்திருந்தாரோ அதற்கு அப்பாலும் கிறிஸ்தவ விசுவாசத்தைச் சுமந்துசெல்லும் கருவியாக அவரைப் பயன்படுத்த தேவன் தீர்மானித்தார்; யூத விசுவாசிகள் இதைக் கற்பனையிலும் எண்ணியிருக்கமாட்டார்கள்.

பிறருடைய ஆவிக்குரிய அனுபவத்தை எடைபோடுவதில் கவனம் தேவை. அதுகுறித்து 1சாமு 16:7; மத் 7:1; 1கொரி 4:5 வசனங்கள் சொல்வது என்ன? எவ்வாறெல்லாம் நீங்கள் பிறரைத் தவறாக எடைபோட்டிருக்கிறீர்கள்? அந்தத் தவறுகளிலிருந்து நீங்கள் கற்றது என்ன?

***புறஜாதியார் மத்தியில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சபை எது? விசுவாசிகள் அங்குச் செல்வதற்குக் காரணமாயிருந்த நிகழ்வுகள் யாவை? அப் 11:19-21,26. பழைய ஏற்பாட்டுக் காலத்தின் என்ன சம்பவத்தை அது உங்களுக்கு நினைவூட்டுகிறது? தானி 2.***

---

ஸ்தேவானின் மரணத்திற்குப்பிறகு எருசலேமில் உபத்திரவம் உண்டானதால், அங்கிருந்து 300 மைல் தொலைவிலிருந்த அந்தியோகிவிற்கு யூதவிசுவாசிகள் பலர் தப்பியோடினார்கள். ரோம மாகாணமான சிரியாவின் தலைநகரம் அது; ரோம் மற்றும் அலெக்ஸாண்டிரியாவுக்கு அடுத்ததாக முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் மக்கள் தொகை 5 லட்சம்; உலகின் பல்வேறு பகுதியினர் அங்கு வாழ்ந்துவந்தார்கள்; எனவே, புறஜாதியாருக்கான ஒரு சபை ஆரம்பிக்கப்படவும், ஆரம்பக்கால சபையின் உலகளாவிய ஊழியப்பணிக்கு மையமாக விளங்கவும் ஏற்ற ஓர் இடமாக அது திகழ்ந்தது.

***பர்னபா அந்தியோகியாப் பட்டணத்திற்குச் சென்றதற்கும், பிறகு பவுலை அந்தியோகியாவிற்கு அழைத்ததற்கும் என்ன நிகழ்வுகள் காரணமாக இருந்தன? அந்தியோகியா சபையின் அப்போதைய நிலைபற்றி என்ன தெரிகிறது? அப் 11:20-26.***

பவுலின் வாழ்க்கையை காலக்கிரமமாகச் சொல்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன; ஆனால், மனம்மாறியபின் அவர் எருசலேமிற்குச் சென்றதுமுதல் (அப் 9:26-30), அந்தியோகியாவில் தன்னோடு வந்து சேரும்படி பர்னபா அவரை அழைத்தது வரைக்கும் ஐந்து வருடங்கள் கடந்திருக்கலாம். இடைப்பட்ட நாட்களில் பவுல் என்ன செய்துகொண்டிருந்தார்? சரியாகத் தெரியவில்லை. ஆனால், கலா 1:21இல் அவர் சொல்வதை வைத்துப்பார்த்தால், சிரியா மற்றும் சிலிசியா பகுதிகளில் அவர் பிரசங்கித்துக் கொண்டிருந்திருக்கலாம். இந்தக் காலக்கட்டத்தில்தான் அவர் தன் குடும்பத்தால் புறக்கணிக்கப்பட்டார் என்றும், 2கொரி 11:23-28 இல் அவர் சொல்கிற பல உபத்திரவங்களை அனுபவித்தார் என்றும் சிலர் கூறுகிறார்கள். ஆனாலும், அந்தியோகியாவின் சபையானது ஆவியானவரின் வழிநடத்துதலின்கீழ் செழித்து, வளர்ந்தது. பல்வேறு தேசத்தினர் அந்நகரத்தில் வசித்ததால், பல்வேறு இனத்தையும் கலாச்சாரத்தையும் சேர்ந்தவர்கள் சபையில் காணப்பட்டார்கள். பர்னபா சீப்புருவைச் சேர்ந்தவர், லூகி சிரெனேயைச் சேர்ந்தவர், பவுல் சிலிசியாவைச் சேர்ந்தவர், சிமியோன் ஆப்ரிக்காவைச் சேர்ந்தவராக இருக்கலாம். அதுதவிர புறஜாதியாரிலும் அநேகர் மனம்மாறியிருந்தார்கள். அந்தியோகியாவை மையமாகக்கொண்டு, சீரியா-யூதேயாவையும் தாண்டி நற்செய்தி பரவுவதையும், அநேக புறஜாதியார் நற்செய்தியை அறிந்துகொள்வதையும் ஆவியானவர் விரும்பினார்.

---

அப் 11:19-26 வரை மீண்டும் வாசியுங்கள். பல்வேறு கலாச்சாரத்தினரும் இனத்தினரும் அந்தியோகியா சபையில் காணப்பட்டார்கள். அந்தச் சபையில் காணப்பட்ட அந்த நல்ல அம்சம் நம்முடைய சபைகளிலும் காணப்படுவதற்கு நாம் என்ன செய்யலாம்?

எல்லா மனிதர்களிடமுமே குறைபாடு உண்டு; ஆரம்பகால அந்த விசுவாச சமூகத்தார் மத்தியில் பிரச்சனை உருவாக வெகுகாலம் ஆகவில்லை.

ஆரம்பக்காலச் சபையில் புறஜாதி விசுவாசிகள் சேர்ந்தவிதம் பலருக்குப் பிடிக்கவில்லை. புறஜாதியாருக்கு ஊழியம் செய்வதுபற்றி பிரச்சனை எழவில்லை; மாறாக, எதன் அடிப்படையில் புறஜாதியார் சபைக்குள் சேர்க்கப்பட வேண்டும் என்பதில் பிரச்சனை உருவானது. 'இயேசுவை விசுவாசிப்பதுமட்டுமே கிறிஸ்தவர்களின் அடையாளம் அல்ல, அவர்கள் விருத்தசேதனம்பெற்று, மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவேண்டும்' என்று சிலர் தர்க்கம் பண்ணினார்கள். புறஜாதியார் மெய்க்கிறிஸ்தவர்களாக மாறவேண்டுமானால், அவர்கள் விருத்தசேதனம் பெறவேண்டுமென்று வாதிட்டார்கள். (பேதுரு - கொர்நேலியுவின் சந்திப்பும் அதன்பிறகான சம்பவங்களும் யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் இடையேயிருந்த பிளவைக் காட்டுகின்றன. அப் 10:1-11:8)

சமாரியர்கள்மத்தியில் பிலிப்பு செய்துவந்த ஊழியத்தையும், அந்தியோகியாவில்புறஜாதிகள்மத்தியில் நடந்த ஊழியத்தையும் கண்காணிக்க, எருசலேம் சபை ஆட்களை அனுப்பினது. அப் 8:14; 11:22. கிறிஸ்தவசமுதாயத்தில் யூதரல்லாதோரையும் சேர்ப்பதற்கு சிலர் அக்கறைகாட்டினது தெரிகிறது. ஆனால், விருத்தசேதனம் பெறாத ரோம வீரனான கொர்நேலியுவுக்கு, பேதுரு ஞானஸ்நானம் கொடுத்தபோது, யூதர் கள் நடந்துகொண்ட விதமானது, ஆதி விசுவாசிகள் மத்தியில் நிலவிய கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்திறது. கொர்நேலியு போன்ற ஒரு புறஜாதியான் எப்போதாவது சபைக்குள் சேர்க்கப்பட்டதே சிலருக்குப் பிடிக்காமல் இருந்தது; ஆனால், இயேசுவை விசுவாசித்தால்மாத்திரம் போதும் என்று சொல்லி சபையின் கதவுகளை புறஜாதியாருக்கு பவுல் திறந்துவிட்டார்; அதனால்தான், பவுலின் ஊழியத்தைக் குறைகூற சிலர் துணிகரமாக முயன்றார்கள்.

***அந்தியோகியாவில் புறஜாதியார் மத்தியில் பவுல் செய்துவந்த ஊழியத்தை யூதேயாவிலிருந்து வந்திருந்த விசுவாசிகள் எவ்வாறு எதிர்த்தார்கள்? அப் 15:1-5.***

விருத்தசேதனம் பற்றிய விஷயத்தில் எருசலேம் ஆலோசனைச் சங்கமானது பவுலுக்கு சாதகமாகப் பேசியது. அப் 15. ஆனாலும் பவுலுடைய ஊழியத்திற்கு எதிர்ப்பு குறையவில்லை. ஏழு வருடங்கள் கழித்து, பவுல் கடைசிமுறையாக எருசலேமுக்குள் வந்தபோதும், பவுலின் சுவிசேஷம் சரியானதாவென்று சிலர் சந்தேகத்தை எழுப்பினார்கள். பவுல் தேவாலயத்திற்குள் நுழைந்தபோது, ஆசியாவிலிருந்து வந்திருந்த யூதர்கள், 'இஸ்ரவேலரே, உதவிசெய்யுங்கள். நம்முடைய ஜனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லோருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்' என்று கூக்குரலிட்டு, அவருடைய உயிருக்கே உலைவைத்தார்கள். அப் 21:28: மேலும் பார்க்க: 21:20,24.

பவுலின் போதனைகுறித்த எச்சரிப்படைந்த யூதவிசுவாசிகளின் இடத்தில் உங்களை வைத்துப்பாருங்கள். அவர்கள் எச்சரிப்படைந்ததையும், எதிர்த்ததையும் எவ்வாறு ஓரளவுக்கு நியாயப்படுத்தலாம்? நல்ல நோக்கத்தோடு செய்தாலும், இதே போன்ற தவறுகளைச் செய்யாதிருக்க நாம் என்ன செய்யலாம்?

## மேலும் படிக்க:



"''யூதமார்க்கத்தைத் தீவிரமாகப் பின்பற்றினவர்; இயேசுவை விசுவாசித்தோரை தீவிரமாக உபத்திரவப்படுத்தினவர்' என்றுதான் பவுலைப்பற்றி முன்பு மக்களுக்குத் தெரியும். அவருடைய துணிவும், பிறரைச் சார்ந்திருக்கத் தேவையற்ற நிலையும், விடா முயற்சியும், தாலந்துகளும், படிப்பும் அவருக்குஎந்த வேலையும் செய்யக்கூடிய திறனை கொடுத்திருந்தன. அசாதாரணத் தெளிவோடு வழக்காட அவர் வல்லவர்; அவர் தன் எதிராளியைத் தனது வாதத்திறமையால், திக்குமுக்காட வைத்துவிடுவார். முன்பு, தான் உபத்திரவப்படுத்தினவர்களுடன் இந்த வாலிபர் இப்போது இணைந்ததையும் இயேசுவின் நாமத்தினால் பயமின்றிப் பிரசங்கிப்பதையும் யூதர்கள் கண்டார்கள்.

" ஒரு படையின் தளபதி போரில் மரித்தால் அந்தப் படைக்கு இழப்பு; ஆயினும், அது எதிரியின் படைக்குக் கூடுதல் பலத்தைச் சேர்க்காது. ஆனால், படையிலிருந்த திறமையான ஒருவர் எதிரியின் படையில் சேர்ந்துவிட்டால், இந்தப் படைக்கு இழப்பு; அவர் சேர்கின்ற படைக்கு பெரிய இலாபம். தமஸ்குவுக்குச் சென்ற தர்சுவின் சவுலை ஆண்டவர் எளிதில் கொன்றிருக்கலாம்; உபத்திரவம்கொடுத்துவந்தவர்கள் வெகுவாகப்பெலமிழந்துபோயிருப்பார்கள். ஆனால், தேவனோ தமது முன்யோசனையின்படி, சவுலின் உயிரை எடுக்காமல், அவர் மனம்மாறும்படி செய்தார். சத்துருவின் வீரன் ஒருவனை, கிறிஸ்துவின் வீரனாக அது மாற்றியது. பவுல் ஒரு சிறந்த விமர்சகர்; ஒப்பற்ற பேச்சாளர்; உறுதியான நோக்கமும் எதற்கும் அஞ்சாத துணிவும் கொண்டவர். இவைதாம் ஆதித் திருச்சபைக்குத் தேவையாக இருந்தன." – *EGW, AA, p 124.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *இயேசுவை விசுவாசித்த யூதர்கள்தாம், பவுலின் பயங்கர எதிரிகளாகவும் விளங்கினார்கள். இதில் நமக்குள்ள பாடம் என்ன?*
2. *மார்க்கநியதிகளில் வைராக்கியம் அவசியம்தான்; அதேநேரம் தேவனுக்கு எதிராகப் போரிடுவதற்கு அது நம்மை வழிநடத்தக்கூடாது; என்ன செய்யலாம்?*

**பாடச்சுருக்கம்:** *தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் உயிர்த்தெழுந்த இயேசுவை சவுல் சந்தித்தது, அவருடைய வாழ்க்கையிலும் ஆதிகாலத் திருச்சபையின் வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வு. முன்பு சபையை உபத்திரவப்படுத்தி வந்த ஒருவரை, புறஜாதியாருக்கு நற்செய்தி கொண்டுசெல்வதற்கு, தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலனாக மாற்றினார். விசுவாசத்தைமட்டும் வைத்து, புறஜாதியாரை சபையில் சேர்த்தார் பவுல்; சபையிலிருந்த சிலரால்அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. முன் அபிப்பிராயங்களும் தவறான அபிப்பிராயங்களும் நம் ஊழியத்தைத் தடைசெய்யக் கூடுமென்பதற்கு இது பலத்த அத்தாட்சி.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,
15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)
## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.